**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.37/2022**

**2024ம்** வருடம் ஜனவரி மாதம் **23ம்** நாள் வாதி தரப்பு சாட்சியான வா.**சா.1** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லாடதவசி | ஜாதி | : |
| த/பெ. | : தன்னாசி | தொழில் | : கொத்தனார் |
| கிராமம் | :தொப்பம்பட்டி | மதம் | : |
| தாலுகா | : | வயது | : 49 /2023 |
| தேதி | : 23.01.2024 | | |

**2** முதல் **6** வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றால் அதில் பாதி பேர் எனது உறவினர்கள். பாதி பேர் எனது ஊரை சேர்ந்தவர்கள். நாங்கள் அனைவரும் ஒரே குலத்தை சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. இரண்டு பிரிவுகள் உள்ளது. நான் வீடு கட்டியுள்ள இடத்தின் சர்வே எண்.224/18, 224/19 ஆகும். சர்வே எண்.224/18-ல் 160 சதுரடி உள்ளது சர்வே எண்.224/19-ல் 110 சதுரடி உள்ளது. இந்த 2 சர்வேஎண்களுக்கும் உட்பட்ட இடம் எனது இடம் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.224/18 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.224/19 க்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.224/18-க்கு கிழக்கு பக்கம் சாலை அமைந்துள்ளது. சர்வே எண்.224/18-க்கு கிழக்கு புறமாக சர்வே எண்.224/19 அமைந்துள்ளது. மேற்கண்ட சர்வே எண்.224/19-ன் மொத்த விஸ்தீரணம் சுமார் 220 சதுரடி இருக்கும். மேற்கண்ட சர்வே எண்.224/19-ல் எனது இடம் 110 சதுரடி என்றால் மீதியுள்ள 110 சதுரடி புறம்போக்கு நிலமாக உள்ளது. காலியிடமாக உள்ளது. சர்வே எண்.224/19 எனது முன்னோர்கள் அனுபவித்து வந்துள்ளதாக சொல்லியுள்ளோம். அதற்கு சான்றாவணம் எதுவும் இல்லை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். சர்வே எண்.224/19-ல் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளோம் என்று சொல்லி மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை எண்.13660/2016 தாக்கல் செய்யப்பட்டு 01.08.2016-ல் விசாரணை செய்யச்சொல்லி உத்தரவு போடப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவுப்படி PDO விசாரணைக்காக எனக்கு நோட்டிஸ் அனுப்பினார் என்றால் சரிதான். அதில் சர்வே எண்.224/19-ல் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகவும் அதை அகற்றிவிடும்மாறும் சொல்லியிருந்தால் சரிதான். சர்வே எண்.224/19-க்கு எனது பெயருக்கு பட்டா வழங்க உத்தரவிடுமாறு கோரி நீதி பேராண்ணை மனு 22695/2016 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டடது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்கண்ட வழக்கு பற்றியும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு 20.10.2016 அன்று தாக்கல்

செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்ததன்நோக்கம் வருவாய்துறை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்ககூடாது என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வீட்டை இடிக்ககூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.224/19-ல் குழந்தை காப்பகம் இயங்கி வந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.224/19-ல் குழந்தைகள் காப்பகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.224/19-ல் அரசு குழந்தைகள் நல காப்பகம் இருந்தது என்றும் அதை இடித்துவிட்டு நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியமான சொத்து சர்வே எண்.224/18 மட்டும் தான் என்றும், சர்வே எண்.224/19 அரசு குழந்தைகள் நல காப்பகத்திற்கு சொந்தமானது என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளின் எதிர்வாதுரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு நான் எந்த ரிப்ளே ஸ்டேட்மெண்டும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையும் படித்து பார்க்கவில்லை. அதற்கு நான் எந்த ரிப்ளே ஸ்டேட்மெண்டும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.224/19 என்பது அரசு குழந்தைகள் நல காப்பகத்திற்கு சொந்தமானது என்பதால் அதனை நான் காலிசெய்து அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.224/19 எனக்கு சொந்தமானது என்பதற்கு எந்த வருவாய்துறை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்பொழுதுதான் வருவாய்துறை அதிகாரிகளிடம் பட்டா கேட்டு விண்ணப்பம் செய்துள்ளேன். நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

District Munsif cum Judicial Magistrate,
Athoor.